பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

சுடர்: 5 | பிரமோதூத ஸ்ரீ ஆடி மீ 20உ | ஞாயிற்றுக்கிழமை (05-08-1990) | ஹிஜ்ரி 1410 முஹர்ரம் பிறை 12 | கதிர்: 155

# கோட்டையை பிடிக்க புலிகள் கடும் தாக்கு!

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 5

யாழ் கோட்டை முகாம்மீது விடுதலைப்புலிகள் இன்று அதிகாலை 12 15 மணியளவில் பெரும் தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர்.

தாக்குதல் ஆரம்பமான வேளையில் – நள்ளிரவு இருட்டில்-இரண்டு பொம்மர்கள் நகருக்கு மேல் வட்டமிட்டு குண்டுகளைப் பொழிந்தன.

தாக்குதலினால் கோட்டைப் பக்கத்தில் தொடர்ந்து பெரும் அதிர்வுடன் குண்டுகள் வெடித்துக் கொண்டிருந்தன. வேட்டுக்களும் சரமாரியாகத் தீர்க்கப்பட்ட வண்ணம் இருந்தன.

மாறி மாறி நகருக்கு மேல் பறந்து குண்டுகளை வீசிய பொம்மர்களினால் நகரப்பகுதியில் பலத்த சேதம் ஏற்பட்டதாகத் தெரியவந்தது. பல கட்டடங்கள், வீடுகள் சேதமுற்றதாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

விடுதலைப்புலிகளின் கடும் தாக்குதலினால் யாழ் கோட்டைப் பகுதி அதிர்ந்த வண்ணம் இருந்தது. பல தடவைகள் மின்னலுடன் பல குண்டுகள் வெடித்தன. தொடர்ந்து நகரை அதிரவைக்கும் விதத்தில் வெடிச் சத்தங்களும் கேட்டன.

மோதலின் பெறுபேறு நிலை என்ன என்பது இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை தெரியவில்லை.

நேற்று இரவிலிருந்தே பொதுமக்கள் நகரை விட்டு வெளியேறிக் கொண்டிருந்ததையும் காணமுடிந்தது. [உ]

# காத்தான்குடி பள்ளிவாசலில்

# 140 முஸ்லிம்கள் சுட்டுகொலை

## வெள்ளி இரவு நடந்த பயங்கரம்

கொழும்பு, ஆக. 5

காத்தான்குடியில் நேற்று முன்தினம் இரவு 8 மணியளவில் இரண்டு பள்ளிவாசல்களுக்குள் ஒரே நேரத்தில் புகுந்த சீருடையணிந்த இரு கோஷ்டியினர் அங்கு தொழுகைக்காக கூடியிருந்தோர் மீது சரமாரியாகச் சுட்டதில் 140 பேர்வரை உயிரிழந்தனர். மேலும் நூறுக்கும் அதிகமானோர் படுகாயமுற்றனர்.

காத்தான்குடியில் உள்ள மீராஜும்மா, ஹுஸானியா ஆகிய பள்ளிவாசல்களில் தொழுகைக்குச் சென்றவர்களே இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

இரண்டுவான்களில் சென்ற இராணுவச் சீருடை அணிந்தோர் காத்தான்குடியில் இரண்டு] பள்ளிவாசல்களுக்குளும் நுழைந்தனர் என்றும்—பள்ளிவாசல்களில் இருந்த வெளிச்சங்களை அணைத்து விட்ட பின்னர் ஆயுதந் தரித்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் மீது பழி போட இலங்கை அரசு முயற்சி!

### மட்டுநகர் கரிகாலன் குற்றச்சாட்டு

கொழும்பு, ஆக. 5

காத்தான்குடிப் படுகொலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் சம்பந்தப்படவில்லை.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின்மட்டக்களப்பு மாவட்டத் தலைவர் கரிகாலன் தொலைபேசி மூலம் கொழும்பில் உள்ள வெளிநாட்டுச் செய்தியாளர் ஒருவரிடம்இத் தகவலைத் தெரிவித்தார்.

இத்தகவலை பி.பி.சி நேற்றிரவு வெளியிட்டது.

இலங்கை அரசு வேறு குழுக்களைக் கொண்டு இப் படுகொலையைச் செய்து விட்டு. புலிகள் இயக்கத்தின் மீது பழியைப் போடுவதாகவும் கரிகாலன் அப்பேட்டியின் போது குற்றஞ்சாட்டினார்.

– இப்படி பி.பி.சி மேலும் தெரிவித்தது. (உ-எ)

## பாலமோட்டைப் பகுதியில் பொம்மர் தாக்கி பெண் பலி

யாழ்ப்பாணம், ஆக. 5

வவுனியா, பாலமோட்டைப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பொம்பர் தாக்குதல் நடத்தப்பட்டதில் யுவதி ஒருவர் கொல்லப்பட்டார்.

ஓமந்தை பாலமோட்டையைச் சேர்ந்த கிருஷ்ணசாமி புவனேஸ்வரி (வயது 17) என்பவரே அந்தயுவதிஆவார்.

இத் தாக்குதலின் போது இலுப்பைக் குளத்தைச் சேர்ந்த பொன்னையா கமலம் (வயது 60), பாலமோட்டையைச் சேர்ந்த நாகலிங்கம் புஸ்பராணி (வயது 30) ஆகியோர் காயமடைந்தனர்.

கால்நடைகள் யாவும் இறந்துள்ளன. (ஒ-9)

## ஸ்ரீலங்கா இராணுவத்திற்கு பாகிஸ்தானியர் பயிற்சி

யாழ்ப்பாணம், ஆக. 5

ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு பாகிஸ்தானியர் பயிற்சி அளித்து வருவதாக விடுதலைப் புலிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை கொண்டை வெட்டுவானில் உள்ள பயிற்சி முகாமில் வைத்தே ''ஆட்லறி'' ஷெல் தாக்குதல் மற்றும் விமானம் ஓட்டும் பயிற்சி போன்றவற்றை அவர்கள் வழங்குவதாக மேலும் தெரிவிக்கப் பட்டது (ஒ-9)

## உணவுப் பொருள்களுக்கு புதிய கட்டுப்பாட்டு விலைகள்

யாழ்ப்பாணம், ஆக. 5

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உணவுப் பொருள்களுக்கு கூட்டுறவுப் பகுதி புதிதாகக் கட்டுப்பாட்டு விலைகளை நிர்ணயித்துள்ளது.

வெளிச்சந்தையிலும்பார்க்க ப. நோ. கூ. சங்கங்களில் பொருள்கள் கூடுதல்விலைக்கு விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்ட புகார்களை அடுத்து

(5 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவிலிருந்து வடக்கு நோக்கி புறப்பட்டு

# ஓமந்தைக்கு முன்னேறிய படையை விடுதலைப் புலிகள் சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், ஆக. 5

வவுனியாவிலிருந்து வடக்கு நோக்கி புறப்பட்ட இராணுவத்தினர் நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) மாலையில் ஓமந்தை வரை முன்னேறியிருக்கின்றனர்.

ஓமந்தை விளாத்திக்குளம் காட்டுக்குள் நிற்கும் இராணுவத்தினரை விடுதலைப் புலிகள் சுற்றி வளைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா மாமடு இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய படையினரே மடுகந்தை, கள்ளிக்குளம். மாணிக்கவளவு ஆகியவை ஊடாக விளாத்திக்குளம் காட்டுக்குள் பிரவேசித்திருக்கிறார்கள்.

நேற்று இப்பிரதேசத்தில் ஹெலிக்கொப்டர்களில் இருந்தும், அவ்ரோ, பொம்மர்களில் இருந்தும் வான் தாக்குதல்கள் இடம்பெற்றுக்கொண்டிருந்ததாகத் தெரிவிக்கப் பட்டது. (உ-9)

## முச்சந்தி முரளி



கட்டுப்பாட்டு விலையிலை விக்கிறதுக்கு சாமான்களும் அப்ப வந்து சேர்ந்தாலும் [illegible]

## நன்றி

எனது அருமைத் தந்தையார் அமரர் இ. ஈஸ்வரபாதத்தின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியும், மலர் வளையங்கள் சாத்தியும், ஆறுதல் கூறியும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும் மற்றெல்லா வகைகளிலும் உதவிய அனைவருக்கும்—

எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். தனிப்பட்ட முறையில் நன்றி கூற முடியாமைக்கு மன்னிக்கவும்.

ஈ. சரவணபவன்,
நிர்வாக இயக்குனர்,
உதயன் நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### Typewriters

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்தவும் மற்றும் தமிழ் ஆங்கிலம் ரைப்பிங் செய்துகொடுக்கவும் Fudo Enterprises (Shiva Studio Upstair) Jaffna Road, Manipay. (சி-5289)

### தேவை

உங்கள் வளவுகளில் இருக்கும் பட்ட மரங்கள் விறகு விலைக்கு கொள்வனவு செய்யப்படும். விபரங்களுக்கு 271, கச்சேரி நல்லூர் றோட், நல்லூர். (13983)

### சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாக தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள், 'சக்தி சரவணா' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக]. தினசரி பகல் 9 மணி தொடக்கம் 1 மணிவரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. [13961]

### சிரட்டை விற்பனை

தேங்காய் சிரட்டை விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: மல்ரி ஒயில், கே. கே. எஸ். வீதி, இணுவில். (13996)

# குவைத்திலிருந்து இன்று முதல் படை விலக்கு என ஈராக் அறிவிப்பு

## ஆனால் மன்னர் ஆட்சிக்கு இனி இடமில்லையாம்

பக்தாத், ஆக.5

குவைத்தில் இருந்து தனது படைகளை இன்று ஞாயிறு முதல் விலக்கிக்கொள்ளப் போவதாக ஈராக் நேற்று அறிவித்தது.

குவைத், ஈராக் நாடுகளின் பாதுகாப்புக்கு பயமுறுத்தல் இல்லாத பட்சத்திலேயே இந்தப் படைவிலக்கல் கட்டம் கட்டமாக இடம்பெறும் என்றும்—

எக்காரணம் கொண்டும் சவூதி அரேபியாவுக்குத் தப்பிச்சென்ற குவைத் மன்னரின் ஆட்சி மீண்டும் ஏற்பட ஈராக் இடமளிக்கமாட்டாது என்றும்—பக்தாத் வானொலியில் வெளியிடப்பட்ட அரசு அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டது.

அதேசமயம் குவைத்தில் ஈராக் தனது படைகளை உடனடியாக விலக்கிக் கொள்ள வேண்டும் என்று கோரி சோவியத் யூனியனும் அமெரிக்காவும் கூட்டாக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.

மாஸ்கோவில் வைத்து இரு நாட்டு வெளியுறவு அமைச்சர்களும் பேச்சுக்கள் நடத்தியபின்னர் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. (இ-எ)

## அமெரிக்கா எச்சரிக்கிறது

வாஷிங்டன், ஆகஸ்ட் 5

சவுதி அரேபியா மீது இராணுவத் தாக்குதல் எதனையும் மேற்கொண்டால் அமெரிக்கா அதனை பார்த்துக் கொண்டிராது என்று அமெரிக்கா ஈராக்கை நேற்று எச்சரித்தது.

ஐ நா. பாதுகாப்புச் சபையின் கூட்டத்தில் அமெரிக்கப் பிரதிநிதி திரு. பிக்கரிங்ஸ் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

இதே வேளை —

குவைத்தில் இருந்து நிபந்தனையுடனான படைவிலகலை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அமெரிக்க அரசு அறிவித்துள்ளது.

சவுதி அரேபியா மீது இராணுவத் தாக்குதல் நடத்தும் எண்ணம் ஈராக்கிற்கு இருப்பதாக அமெரிக்க பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ)

### 15 ஆயிரம் வீரர்களுடன்

## மத்திய தரைக் கடலுக்கு அமெரிக்க கடற்படை!

வாஷிங்டன், ஆக. 5

மத்தியதரைக் கடல் பகுதிக்கு 15 ஆயிரம் கடற்படை வீரர்களுடன் அமெரிக்காவின் சில யுத்தக் கப்பல்களும், மூன்று விமானந்தாங்கிக் கப்பல்களும் திங்கட்கிழமைபுறப்படும் என்று வாஷிங்டனில் பாதுகாப்பு அமைச்சு நேற்று அறிவித்தது.

குவைத்தை ஈராக் கைப்பற்றியதைத் தொடர்ந்து வளைகுடா நாடுகளில் ஏற்பட்டுள்ள பதற்றம் காரணமாக அமெரிக்கா இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறது. [உ-எ]

## மக்கள் அஞ்சலி

திருநெல்வேலி, ஆக. 5

வாகன விபத்தென்றில் மரணமான மேஜர் குட்டியின் பூதவுடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக நேற்றுக்காலை யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்தது.

மேஜர் குட்டியின் பூதவுடலுக்கு பெரும் எண்ணிக்கையான மக்கள் அஞ்சலி செலுத்தினர். (ஒ-143)

## சங்கத்தில் களவு

அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதத்தால் யாழ். ஆபரணத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் பாதிப்புற்றுள்ளது. அங்கிருந்த பெறுமதியான பல பொருள்களும் திருக்கேதீஸ்வரம் கோவிலுக்கு என சேகரிக்கப்பட்ட உண்டியல் பணமும் களவாடப்பட்டுள்ளன என்று சங்கம் அறிவித்துள்ளது. (ஒ-5)

## வவுனியாவுக்கு பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 5

வவுனியாவுக்கான பஸ் சேவைகள் நேற்று மீண்டும் ஆரம்பமாகின.

ஊரடங்கு உத்தரவு காரணமாக கடந்த சில தினங்களாக வவுனியா பஸ் சேவை நிறுத்தப்பட்டிருந்தது.

ஊரடங்கு தளர்த்தப்பட்டதாக அறிவிக்கப்படாத போதிலும் நேற்றுக்காலை வவுனியாவில் இருந்து சில மினிபஸ்கள் யாழ்ப்பாணம் வந்தடைந்தன.

அதை அடுத்து நேற்று மாலை யாழ். நகரில் இருந்தும் வவுனியா நோக்கி பஸ்கள் புறப்பட்டன. (ஒ-9)

## நல்லூரில் மஞ்சம்

கொழும்புத்துறை, ஆக. 5

நல்லூர் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் பத்தாம் திருவிழா மஞ்சம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை ஐந்து மணிக்கு நடைபெறும். (இ-30)

## களவு போன மருந்துவகைகள்

கொழும்பு, ஆக, 5

கொழும்பு பெரியாஸ்பத்திரியில் இருந்து களவு போனதாகக் கருதப்படும் பதினைந்து லட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளை கொழும்புப் பொலீஸார் பிற்றகோட்டைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து கைப்பற்றினர். (இ-எ)

## களுவாஞ்சிக்குடி தபால் நிலையம்

கொழும்பு, ஆக. 5

களுவாஞ்சிக்குடியில் தபால் நிலையம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் தனியார் கட்டடம் ஒன்றில் இயங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. [இ-எ]

### களஞ்சியத்திலிருந்து உணவு எடுக்க

## உதவி அரச அதிபர்கள் நேரில் செல்ல வேண்டும்

முல்லைத்தீவு மாவட்ட பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்கள் வவுனியா உணவுக் களஞ்சியத்தில் இருந்து உணவுப் பொருள்களைப் பெறவேண்டுமானால் உதவி அரசாங்க அதிபர்களே நேரில் செல்ல வேண்டும்.

வவுனியா அரசாங்க அதிபர் திரு. இரட்நாயக்கா இந்த உத்தரவை விடுத்திருப்பதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

கடந்த வாரம் மட்டும் வவுனியா அரசாங்க அதிபரின் ஏற்பாட்டில் 10 லோட் உணவுப் பொருள்கள் முல்லைத்தீவுக்குக் கொண்டு வரப்பட்டன என்றும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். (இ-10)

## முல்லைத்தீவுக்கு அனுப்பியது 10 நாட்களுக்கே போதும்

யாழ்ப்பாணம், ஆக. 5

முல்லைத்தீவு மாவட்டத்துக்கு கப்பல் மூலம் 280 மெட்ரிக் தொன் உணவுப்பொருள்களே அனுப்பி வைக்கப்பட்டன.

இவை பத்து நாட்களுக்கு மட்டுமே போதுமானவை என முல்லைத்தீவு அரசாங்க அதிபர் திரு. வே. பொன்னம்பலம் தெரிவித்தார்.

200 மெட்ரிக் தொன் அரிசி, மா, 45 மெட்ரிக் தொன் சீனி, பருப்பு, மற்றும் பால்மா, மெழுகுதிரி, தீப்பெட்டி, திரிபோஷ ஆகியவை இவற்றில் அடங்கும்.

இதேவேளை முல்லைத்தீவில் இறங்குதுறை வசதி இல்லாததால் மூன்று அடி ஆழமான தண்ணீருக்குள் நின்றே கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டன என்று முல்லைத்தீவு அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்தார். (இ-10)

## போட்டி அ.தி.மு. கவில் மற்றும் ஒரு எம்.எல்.ஏ

சென்னை, ஆக. 5

ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.கவில் இருந்து மேலும் ஒரு எம். எல். ஏ. வெளியேறி திருநாவுக்கரசு தலைமையிலான போட்டி அ. தி. மு. க.வில் சேர்ந்திருக்கிறார்.

அந்த எல். எல். ஏ யின் பெயர் திரு. ஆர். மூக்கன்.

இத்துடன் போட்டி அ. தி மு.க.வில் உள்ள எம்.எல்.ஏக்களின் எண்ணிக்கை நான்காக அதிகரித்தது.

ஜெயலலிதா தலைமையிலான அ. தி. மு.க எம்.எல். ஏக்களின் எண்ணிக்கை 25 ஆகக் குறைந்தது.

இதனால் அக் கட்சி தமிழக சட்டசபையில்பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தை இழந்தது. மற்றொரு எதிர்க்கட்சியான இந்திரா காங்கிரஸ் தமிழக சட்டசபையில் 26 உறுப்பினர்களைக் கொண்டிருப்பது தெரிந்ததே.

இதே வேளை-

அ. தி. மு. க விவகாரம் குறித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் எந்த மனு குறித்தும் தனக்கு முன்னறிவிப்புக் கொடுக்காமல் முடிவு எதுவும் எடுக்கக்கூடாது என்று கோரும் விண்ணப்பம் ஒன்றை அ.தி.மு.க பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா கடந்தவெள்ளிக்கிழமை சென்னை உயர்நீதி மன்றத்தில் தாக்கல் செய்தார் (இ-எ)

# இலங்கை அகதிகளுக்கு தமிழகம் சகல விதத்திலும் உதவி

## யாழ். வந்தவர் தகவல்

யாழ்ப்பாணம், ஆக. 5

"இலங்கையில் இருந்து தமிழகம் செல்லும் அகதிகளுக்கு சகல வசதிகளையும் தமிழக அரசு செய்துகொடுக்கிறது. தமிழக மக்களும் ஆர்வத்துடன் அவர்களுக்கு உதவுகிறார்கள்"

தமிழகத்தில் இருந்து யாழ்ப்பாணம் வந்த ஒருவர் மேற்கண்டவாறு கூறினார்.

தமிழகத்தில் உள்ள அகதிகள் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது;

தனுஷ்கோடியிலும், இராமேஸ்வரத்திலும் தினமும் 10 படகுகளில் அகதிகள் வந்து இறங்குகிறார்கள். தனுஷ்கோடியில் இறங்கும் அகதிகளும் இரமேஸ்வரம் சுங்கத் திணைக்களத்துக்கு கொண்டு வரப்படுகிறார்கள். அங்கு செஞ்சிலுவைச் சங்கம் அவர்களை உபசரித்து அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்குகிறது. தமிழக அரசு அவர்களுக்கு உணவு, உடைகளை வழங்குகிறது.

இராமேஸ்வரம் சுங்கத் திணைக்களத்தில் சகல அகதிகளும் விசாரிக்கப்பட்டபின் அடையாள அட்டை வழங்கப்படுகிறது. அரச போக்குவரத்து வாகனங்கள் மூலமாக பொலீஸ் பாதுகாப்புடன் அவர்கள் முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். அங்கு அவர்களுக்கு தேவையான வசதிகள் செய்யப்படுகின்றன. தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர்களும், சட்டசபை உறுப்பினர்களும், மாவட்ட கலெக்டர்களும் முகாம்களுக்குச் சென்று அவர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்கி வருகிறார்கள்.

அகதிகளுக்கு வேலைவாய்ப்பும் அளிக்கப்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு முகாம்களுக்கு அருகில் உள்ள பாடசாலைகளில் கல்வி வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன என்றார் அவர். (இ-3)

## மோட்டார் சைக்கிள் களவு

யாழ்ப்பாணம், ஆக. 5

கொக்குவில் பகுதியில் வீட்டில் இருந்தவர்கள் நித்திரையில் ஆழ்ந்து இருந்தபோது அங்கிருந்த "சலி" மோட்டார் சைக்கிள் திருட்டுப் போயுள்ளது.

கடந்த புதன்கிழமை தியாகராஜா ஐயர் என்பவருடைய வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை நாச்சிமார் [illegible] சைக்கிள் களவுபோயுள்ளதாகக் கூறப்பட்டது. (ஒ)

## விசேட பூசை கூட்டு வழிபாடு

யாழ்ப்பாணம், ஆக. 5

தமிழ் மக்களுக்கு அமைதி, சமாதானம் வேண்டியும், ஈழப்போரில் உயிர் நீத்த போராளிகளினதும், பொது மக்களினதும் ஆத்ம சாந்திக்காகவும் கடந்த 27 ஆம் திகதி ஊரெழு சக்திபுரம் சிவபூரணி காளியம்மன் தேவஸ்தானத்தில் விசேட பூசையும் கூட்டு வழிபாடும் நடைபெற்றன.

வானில் பொம்மர், ஹெலி சுற்றிய போதும் நூற்றுக்கணக்கான மக்கள் வழிபாட்டில் கலந்து கொண்டனர். (இ-5)


### தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

#### நிர்வாகசபைக் கூட்டம்

இடம் : ''யூனிவேர்சல்'', கந்தர்மடம், யாழ்ப்பாணம்

காலம்: 7-8-90 (செவ்வாய்) காலை 10 மணி

நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

#### பொதுச்சபைக் கூட்டம்

இடம் : யா/நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலை (யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அருகாமையில்)

காலம்: 9-8-90 (வியாழன்) காலை 10 மணி

பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்.

செயலாளர்

[13613]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கிட்ட இருந்தால் முட்டப் பகையே!

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரி, மீண்டும் யாழ் நகரிலேயே இயங்க வகை செய்வதற்கு அரசாங்கத் தரப்பில் யோசனை ஒன்று முன் வைக்கப்பட்டிருக்கிறது.

அரசாங்கம் தெரிவித்துள்ள பிரதான யோசனை: யாழ் ஆஸ்பத்திரியைச் சூழவுள்ள பகுதியை இராணுவ நடவடிக்கை விலக்கப்பட்ட பிரதேசமாக்கி — யுத்த சூன்யப் பிரதேசமாக்கி (De - Militarized Zone) - ஆஸ்பத்திரியை இயங்கச் செய்து மக்களுக்கும் இராணுவத்தினருக்கும் சிகிச்சை அளிக்க வசதி செய்வது என்பதாகும்.

இந்தப் பிரதான யோசனையை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு தெரிவித்திருக்கும் வழிமுறைகளோ குழப்பத்தைத் தருவனவாக உள்ளன; முரண்பாடான நிலையைத் தோற்றுவிக்கின்றன.

ஆஸ்பத்திரியைச் சூழ உள்ள பகுதிகளில் யுத்த சூன்யம் ஏற்பட வேண்டுமென்றால், அமைதி நிலை உருவாக்கப்பட வேண்டுமென்றால், அப்பகுதியில் இருந்து போரில் ஈடுபட்டுள்ள இருசாரார்களினதும் இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும்.

அப்போது தான் ஆஸ்பத்திரிப் பகுதியில் பதற்ற நிலை உருவாகாது என்ற மனத்துணிவுடன் ஆஸ்பத்திரி ஊழியர்கள் தங்கள் கடமைகளில் புலனைச் செலுத்திப் பணி புரிய முடியும். நோயாளர்களும் இராணுவ நடவடிக்கையால் உயிராபத்து வராது என்ற நிச்சயத்துடன் சிகிச்சைக்குச் செல்ல முடியும்.

ஆனால் —

ஆஸ்பத்திரிப் பகுதி இராணுவ நடவடிக்கை விலக்கப்பட்ட பிரதேசமாக்கப்படும் பட்சத்தில், அப்பகுதியில் தாக்குதல் நடத்தவேண்டாம் என்று அரச படைகளுக்கு உத்தரவிடப்படும் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூறியிருக்கிறார்.

இதன் அர்த்தம் — யாழ் கோட்டையில் இராணுவம் தொடர்ந்து நிலை கொண்டிருக்கும் என்பதாகும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் தாக்குதல் நடக்காமல் கண்காணித்துக் கொள்ளும் என்ற தகவலும் யாழ் கோட்டையை அரசு தொடர்ந்து இராணுவ முகாமாக வைத்திருக்கும் என்பதையே ஊர்ஜிதப்படுத்துகிறது!

முன்னர் பல தடவைகள் ஸ்ரீலங்கா அரசு யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழுக்களை நியமித்ததும், ஆனால் அவை கையாலாகாதவையாக மாறும் விதத்தில் அரச படைகள் யுத்த நிறுத்த மீறல்களை நடத்தியதையும் தமிழர்கள் மறந்து விடவில்லை!

எனவே யாழ் ஆஸ்பத்திரி இராணுவத் தாக்குதலுக்கு உட்படாமல் இருக்க வேண்டுமெனின், அதனைச் சூழ உள்ள பிரதேசம் இராணுவம் நீக்கப்பட்ட பகுதியாக மாற்றப்பட வேண்டும். வானத்திலிருந்தோ, கடலில் இருந்தோ தரையில் தூர இருந்தோ அந்தப் பிரதேசத்தின் மீது தாக்குதல் நடத்தப்படாமல் இருக்கவும் வகை செய்யப்பட வேண்டும்.

அதை விடுத்து —

வெறும் யுத்த சூனியப் பிரதேசம் என்பது — கிட்ட இருந்தால் முட்டப்பகை; பழைய குருடி கதவைத் திறவடி என்ற நிலைக்கே இட்டுச் செல்லும்.

## ஈழத் தமிழருக்கு ஆதரவாக தமிழகத்தில் உணர்ச்சி மயம்

யாழ்ப்பாணம், ஆக. 5

''தமிழ் ஈழத்தில் நடக்கும் இனப் படுகொலைக்கு எதிராக தமிழக மக்கள் உணர்ச்சி பூர்வமாக குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஆதரவு முற்று முழுதாக இருக்கிறது''.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த ஜி. மூர்த்தி என்பவர் தமது சொந்த அலுவலாக யாழ்ப்பாணம் வந்த போது உதயனுக்கு மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழகத்தில் ஒன்று பட்டு ஒரேகுரலில் ஈழத் தமிழர்களுக்காக சகல தரப்பினரும் சகல கட்சியினரும் குரல் எழுப்புகிறார்கள்;

தமிழகத்தில் தினமும் சகல பத்திரிகைகளிலும் ஈழத்தமிழர் பற்றிய தலைப்புச் செய்திகள் தான்.

''ஈழத்தில் தமிழர் பட்டினிச்சாவு'' ''இனப்படுகொலை உச்சக்கட்டம்'' ''குண்டுவீச்சுக்கு தமிழர் சாவு'' போன்ற தலைப்புச் செய்திகள் வெளிவருகின்றன. அத்துடன் ஆசிரியர் தலையங்கங்களும் எழுதப்படுகின்றன.

அங்குவரும் அகதிகளை அரசு மட்டுமல்ல தமிழக மக்களும் ஆதரித்து பராமரிக்கிறார்கள்.

இப்படி அவர் கூறினார். (இ - 3)

## இந்து ஆலயங்கள் சேதம் குறித்து பேரவை கண்டனம்

கொழும்புத்துறை, ஆக. 5

சிங்கள பௌத்த அரசாங்கம் திட்டமிட்டு இந்து ஆலயங்களை விமானக் குண்டு வீச்சு மூலம் தரைமட்டமாக்கியும் சேதப்படுத்தியும் வருகின்றது. கடந்த காலங்களில் பிறமத ஆக்கிரமிப்புக்களின் போது இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டதுபோன்று தற்போதைய 'பௌத்த' மத ஆக்கிரமிப்பின்போதும் அழிக்கப்படுகின்றன.

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் துணைச் செயலாளர் மேற்கண்டவாறு கவலையும் கண்டனமும் தெரிவித்துள்ளார்.

'மட்டக்களப்பில் பல இந்துக்கோவில்கள் சேதமடைந்துள்ளன. தண்ணீரூற்றுப் பகுதியில் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலினால் தண்ணீரூற்றுப் பிள்ளையார் கோவில் உட்பட ஐந்து இந்துக்கோவில்கள் சேதமடைந்துள்ளன. வடமராட்சி ஒப்பரேஷன்-லிபரேஷனின் போது சரித்திரப் பிரசித்தி பெற்ற தொண்டமனாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலய சித்திரத் தேர் தீக்கிரையாக்கப்பட்டது'.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-30)

### அகண்ட நாம வழிபாடு

சுழிபுரம், ஆகஸ்ட் 5

பண்ணாகம் விசவத்தனை முருகப்பெருமான் ஆலயத்தில் தொடர்ந்து அகண்ட நாம வழிபாடு நடைபெற்று வருகிறது. (இ-28)

## கிளாலி அகதி முகாம் மீது ஹெலி தாக்குதல்

பச்சிலைப்பள்ளி, ஆக. 5

கடந்த வாரம் கிளாலி றோமன் கத்தோலிக்க பாடசாலை அகதி முகாம் மீது ஹெலியிலிருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் இரு சிறுவர்கள் காயமடைந்தனர்.

இத்தாக்குதலினால் இப்பாடசாலையும் வேறு சில கட்டடங்களும் சேதமுற்றன.

இவ் அகதி முகாமில் மன்னார், திருமலை, வவுனியா, குருநகர், வயாவிளான் உட்பட பல பகுதிகளைச் சேர்ந்த சுமார் இரண்டாயிரம் பேர் அகதிகளாக தஞ்சமடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-117)

## தமிழர்கள் தாக்கப்படும் சம்பவங்கள் அதிகரிப்பு

நுவரெலியா, ஆக. 5

தற்போதைய நெருக்கடியான நிலையைப் பயன்படுத்தி சிங்களவர்கள் தமிழர்களைத் தாக்கவும் தமிழர்களின் பொருள்களைக் கொள்ளையடிக்கவும் தொடங்கி உள்ளார்கள்.

கொழும்பு- ஹட்டன் பிரதான வீதியில் உள்ள அவிசாவளை, கித்துள்கல, கினிகத்தேன ஆகிய இடங்களில் தொடர்ச்சியாக தமிழ் பஸ் பிரயாணிகள் தாக்கப்படுகிறார்கள். அவர்கள் உடமைகள் கொள்ளைஅடிக்கப்படுகின்றன. இதனால் கொழும்பில் இருந்து ஹட்டன் செல்லும் தமிழ் பஸ் பிரயாணிகள் அச்சம் அடைந்து காணப்படுகின்றனர்.

நுவரெலியாவில் பலத்த பொலீஸ் பாதுகாப்பு செய்யப்பட்டுள்ளது. எனினும் தமிழ்மக்களின் கடைகள் நேரகாலத்துடன் மூடப்படுகின்றன. ஹட்டனில் எவ்வித அசம்பாவிதமும் இல்லை.

தலவாக்கொல்லை நகருக்கு வந்த தமிழ் தோட்டத் தொழிலாளர்களுடன் சில சிங்களவர்கள் வாய்த் தர்க்கத்தில்ஈடுபட்டதைத் தொடர்ந்து நகரில்பலத்த பாதுகாப்பு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. சில தமிழ் வாலிபர்கள் பொலீஸ் விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்டுப்பின் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். (இ-58)

## எரிபொருள் மருந்து தட்டுப்பாடு

கிளிநொச்சி, ஆக. 5

கிளிநொச்சி மாவட்டத்தில் உணவுப் பொருள்கள், எரிபொருள் மற்றும் மருந்து வகைகள் ஆகியவற்றுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

வியாபார நிலையங்கள் எதுவும் இயங்காமையாலும், பொது சேவைகள் எதுவும் நடைபெறாமையாலும் இந்த நிலை ஏற்பட்டு உள்ளது.

# குடா நாட்டு நிலைமையை விளக்கி பிரசைகள் குழு பிரேமாவுக்கு மகஜர்

யாழ். குடா நாட்டினுள் கடந்த ஜூலை 21 வரை இடம்பெயர்ந்து வாழ்ந்து வரும் மக்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 73 ஆயிரத்து 355 ஆகும் 54 ஆயிரத்து 671 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இவர்கள் ஆவர்.

குடாநாட்டின் கரையோரப் பகுதிகளில் 3-4 மைல் சுற்றளவில் வாழ்ந்துவருபவர்களே இப்படி இடம்பெயர்ந்தனர்.

யாழ். குடாநாட்டில் ஜூலை 21 வரை திருகோணமலை, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 39 ஆயிரத்து 525பேர் அகதிகளாகத் தஞ்சமடைந்தனர்.

7 ஆயிரத்து 905 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இவர்கள்.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 2 ஆயிரத்துக்கு அதிகமான குடிமக்கள் கொல்லப்பட்டும் காணாமற்போயும் உள்ளனர்.

> யாழ்ப்பாணம் பிரஜைகள் குழு மூன்று கோரிக்கைகளை முன்வைத்து ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறது. அந்த மகஜரின் சுருக்கம் நேற்றைய உதயனில் வெளியாகி இருந்தது அதில் மேலும் தெரிவிக்கப்பட்ட விபரங்கள் இங்கே தரப்பட்டுள்ளன.

வடக்கு கிழக்கு மாகாணத்தில் இடம்பெயர்ந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 8 லட்சத்துக்கு அதிகமாகும்.

### உணவு விநியோகம் ஸ்தம்பிதம்

நிரந்தரக் குடியிருப்பாளருக்கும் முகாம்களில் கஷ்டப்படும் இடம்பெயர்ந்தவர்களுக்குமான அத்தியாவசிய உணவுப்பொருள் விநியோகம் ஸ்தம்பிதநிலையை அடைந்துள்ளது.

தற்போதைய யுத்தம் ஆரம்பமாகும் முன்னர் இருந்த அத்தியாவசிய உணவுப் பொருள்களின் கையிருப்பு குறைந்து விட்டது.

இருக்கும் சொற்ப உணவுப் பொருள்களும் சராசரி பிரசை ஒருவரின் கைக்குக் கிடைக்க முடியாத அளவுக்கு கூடிய விலைக்கே விற்கப்படுகின்றன.

விவசாய உற்பத்திகள் ஸ்தம்பித நிலையை அடைந்து உள்ளன. ஒருபுறம் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு மறுபுறம் மின் விநியோகத் துண்டிப்பு- இதன் காரணமாக நீர்ப்பாசனம் இன்றி பயிர்கள் அழிகின்றன.

### போக்குவரத்து சீர்கேடு

பொது மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகள் பாதிக்கப்பட்டிருப்பதால் கைத்தொழில்கள் அனைத்தும் ஸ்தம்பிதமடைந்துள்ளன இதனால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்து உள்ளது.

போக்குவரத்துச் சேவைகள் சீர்குலைந்திருப்பதால் அரச மற்றும் தனியார் துறையினருக்குத் தேவையான மருந்து வகைகள் விநியோகம் தடைப்பட்டு உள்ளது. உயிர் காக்கும் மருந்துகள் இன்மை காரணமாகபலஉயிரிழப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

நிலைமையைஇன்னும்மோசமாக்குவது போன்று, பணப்புழக்கமும் ஸ்தம்பித்து விட்டது. காரணம் வங்கிகள் உபயோகமான முறையில் இயங்காமையே. குடாநாட்டு மக்களின் பொருளாதாரமே ஆட்டம் காணும் நிலையில் உள்ளது.

கடந்த ஜூன் 11ஆம்திகதியின் பின்னர் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்புடன்முதல் தடவையாக 39 லொறிகள் மூலம் உணவுப்பொருள்களையும் மருந்து வகைகளையுப் உங்களது அரசு அனுப்பி வைத்தது நம்பிக்கை ஒளியைத் தந்தது.

ஆனால் அனுப்பி வைக்கப்பட்ட பொருள்கள் ஏற்கனவே பட்டினியால் வாடும் மக்களின் ஒருநாள் தேவைக்கே போதாதவையாக இருந்தன.

### யாழ். போதனாஆஸ்பத்திரி

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் முழுத்தேவையையும் பூர்த்தி செய்யும் யாழ். போதனா ஆஸ்பத்திரி மூடப்பட்டுள்ளது. இது உடனடியாக திறக்கப்பட வேண்டும். இலங்கை ஆயுதப்படையினரும் இந்திய அமைதிப் படையினரும் முன்னர் நடத்திய இரண்டு இராணுவ நடவடிக்கைகளின் போதும் யாழ் போதனா ஆஸ்பத்திரி இயங்கி வந்ததை சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

1983 ஜூலை மாதத்தில் இருந்து வடக்கு-கிழக்கு மக்கள் யுத்த பயங்கரங்களை அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள். என்பதை உங்களுக்கு சுட்டிக்காட்ட வேண்டிய தேவை இல்லை. [இ-எ]

### நல்லூர் உற்சவகால சிறப்பர்சம்

#### முருகனே! மனங்களிக்க அருளுவாய்

மஞ்சு தவழும் நல்லைப் பதியில்
நாடி வாழும் முருகனே!
அஞ்சி அஞ்சி அநவரதமும்
அல்லல் கொண்டு வாழும்நாம்
தஞ்சம் என்று செஞ்சி உனது
தாள் பிடித்தே வேண்டுறோம்
மஞ்சம் மீதில் இன்று ஏறி
மனங்களிக்க அருளுவாய்

-கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

[இன்று நல்லூர்க் கந்தசுவாமி 10 ஆம் திருவிழா மஞ்சம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவுக்கும், எரிபொருளுக்கும் ஏங்கும் நிலை மாறி

# இன்றைய சூழ்நிலைக்கு ஏற்ப வாழப் பழகிக் கொள்ள வேண்டும்

## கல்வி அதிகாரிகள் மத்தியில் மாத்தயா

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 5 'மரண' ஓலம் அகதிமுகாம், பட்டினிச் சாவு இவைதான் தொடரப் போகின்றன. இந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப வாழப் பழகிக் கொள்ள வேண்டும். டாம்பீகமான வாழ்க்கைதான் வேண்டும் என்ற மனநிலை மக்கள் மனதில் இருந்து அகல வேண்டும்,

— இப்படிக் கூறினார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா).

யாழ். மாவட்ட பாடசாலை அதிபர்கள், கல்வி அதிகாரிகள் மத்தியில் வெள்ளியன்று காலை அவர் பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:—

மக்களின் வாழ்க்கை இன்று சீர்குலைந்துள்ளது. அடுத்த நேரம் என்ன நடக்குமோ என்று மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைதான் தொடரப்போகிறது. போராட்டமும் கூர்மை அடைந்து வருகிறது.

ஒரு காலகட்டத்தில் அமைதி வேண்டும், புனரமைப்புப்பணி செய்ய வேண்டும் என்று நாமும், மக்களும் நப்பாசை கொண்டிருந்தோம் அந்த நிலை மாறிவிட்டது. இன்றுள்ள நிலைமைக்கேற்ப மக்கள் தம்மைத் தயார் படுத்திக்கொள்ள வேண்டும்.

எரிபொருள், மின்சாரம், உணவு எப்போதுவரும் என்று மக்கள் ஏங்கிக் கொண்டிருக்கும் நிலை மாறவேண்டும்.

உலகில் யுத்தம் நடக்கும் நாடுகளில் உள்ள மக்கள் தமது வேலை நேரத்திலும் பார்க்க இருமடங்கு நேரம் உழைக்கிறார்கள். ஆனால் இங்கு சகல தரப்பினரும் குறிப்பிட்ட எட்டு மணித்தியாலங்கள் கூட வேலை செய்வதில்லை. இன்றுள்ள நிலையை உணர்ந்து சகல தரப்பினரும் செயற்படவேண்டியது அவசியம்.

### சகலரும் குரல் கொடுக்க வேண்டும்

ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி அதிகாரிகள் முதல் சகல அரச ஊழியர்களும் தமது வேலைபறிபோய்விடும், இடமாற்றம் வரும், பதவி உயர்வு நிறுத்தப்பட்டுவிடும் என்ற நிலையில் போராட்டத்துக்குத் தமதுபங்களிப்பை வழங்க பின் நிற்கிறார்கள்.

அந்த மனோ நிலையில் இருந்து அவர்கள் விடுபட வேண்டியது அவசியம். தமிழர்கள் இந்த நாட்டுப் பிரசைகள் என்பதை சிறிலங்கா அரசு ஏற்கவில்லை. தமிழர்கள் அனைவரும் போராளிகள், வேண்டாதவர்கள் என்று அரசு ஒதுக்கியுள்ள நிலையை அரச ஊழியர்கள் சிந்திக்க வேண்டும்.

விடுதலை கிடைத்தபின் பழைய வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கலாம். இன்று நடக்கும் இன ஒழிப்புக்கு எதிராக சகல தரப்பினரும் குரல் கொடுத்தே ஆகவேண்டும்.

பாடசாலைகள் எப்போது ஆரம்பிக்கும் என்பதற்குக் கூட பதில் இல்லாத நிலையில் வாழும் தமிழினம், உரிமையுடன் வாழ அதிபர்கள், ஆசிரியர்கள் பங்கும் அவசியமானது.

சிங்களவர்களிடையே உள்ள இன உணர்வு தமிழர்களிடையே இன்று இல்லை. யாரோ போராட்டம் நடாத்துகிறான் எமக்கென்ன என்ற நிலையிலேயே பலர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்த வெட்கக்கேடான நிலைமாற வேண்டும்-இப்படி அவர் கூறினார். [இ-3]


## இடமாற்றம்

### மேர்வின்ஸ் (MERWIYNS)

91/1, மின்சார நிலைய வீதியில் இயங்கிவந்த எமது ஸ்தாபனம் 39, புதுச்செம்மணி றோட், நல்லூர் வடக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். [13991]


## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



சங்கரன் மனோகரன்

தோற்றம்: 05 - 06 - 1955

மறைவு: 05 - 08 -1984

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காயும், வழிகாட்டியாயும் திகழ்ந்து எங்களை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்ட எமது அன்புத் தெய்வமே! உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

உங்களின் பிரிவால் துயருறும்:
மனைவி, பெற்றோர்,
சகோதரர்கள், சகோதரி
அண்ணிமார், மற்றும் குடும்பத்தினர்.

37, விக்டோரியா றோட்,
யாழ்ப்பாணம். [13988]

### கால்நடை திருட்டு

காங்கேசன்துறை, ஆக 5 வலி வடக்கில் மக்கள் இடம் பெயர்ந்த பகுதிகளில் கால்நடை திருட்டுப்போகின்றன. (இ- 68)

### பாடசாலையில் திருட்டு

யாழ்ப்பாணம், ஆக. 5 கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாலய காரியாலய அறை. விஞ்ஞான தொழில் நுட்ப ஆய்வு கூட அறைகள் உடைக்கப்பட்டு மின்விசிறி, சுவர் மணிக்கூடு மற்றும் விஞ்ஞான தொழில் நுட்ப உபகரணங்கள் களவாடப்பட்டுள்ளன. (இ)

### சென். ஜோன் அம்புலன்ஸ்

யாழ்ப்பாணம், ஆக. 5 நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு வழமை போல் சென் ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிச்சேவையில் ஈடுபட்டுள்ளது இதற்கு பொறுப்பாக நல்லூர்படை அத்தியட்சகர் செ. கண்ணதாசன் சடமையாற்றுகிறார். (இ)

### வல்வை படுகொலை தினம்

வல்வெட்டித்துறை, ஆக 5 கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் வல்வெட்டித்துறையில் இடம் பெற்ற வல்வை படுகொலைச் சம்பவங்கள் தொடர்பாக துக்கதினம் அனுஷ்டிக்கப்படுகிறது

இப்படுகொலையில் உயிர் துறந்த பொதுமக்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக அஞ்சலிக் கூட்டமும் நடைபெறுகின்றது.

படுகொலைக்கு ஆளானவர்களின் ஆத்மசாந்திக்காக வல்வை வைத்தீஸ்வரர் தேவஸ்தானத்தில் நெய்விளக்கேற்றி விசேஷ ஆத்மசாந்திப் பூசை இடம்பெற்றது. (இ-160)

### தடுப்பூசி

யாழ்ப்பாணம், ஆக. 5 திருகோணமலையிலிருந்து முல்லைத்தீவுக்கு வந்துசேரும் சகல அகதிகளுக்கும் நேர்ய்த் தடுப்பூசி போடும் வேலைகள் யாழ். செஞ்சிலுவைச்சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. [உ-3]

செய்திச் சாரம்

### கனடா உதவி

கொழும்பு, ஆக. 5 வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்காக கனடா அரசு, சமூக சேவை நிறுவனங்கள் சம்மேளனத்திற்கு 17 லட்சம் ரூபா பணத்தை அன்பளிப்புச் செய்துள்ளது.

இச்சம்மேளனத்தில் 118 அரசுசார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் அங்கம் வகிக்கின்றன. [ஒ-எ]

### வேலணையில் விஷக்கடி வைத்தியம்

கொழும்புத்துறை, ஆக, 5 யாழ்ப்பாணம் கொட்டடி பிரபல விஷக்கடி வைத்தியர் திரு மு. க.சிற்றம்பலம் தற்போது வேலணையில் உள்ள ஆலம்புலம் என்ற இடத்தில் இருந்து இலவச விஷக்கடி வைத்தியம் செய்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-30)

### ஷெல் வீச்சில் தம்பதியர் காயம்

கிளிநொச்சி, ஆக. 5 நித்திரையில் இருந்த கணவனும், மனைவியும் அதிகாலை வேளை வீட்டில் வீழ்ந்து வெடித்த ஷெல்லினால் படுகாயம் அடைந்தனர்.

பரந்தன் இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் வீட்டில் வீழ்ந்து வெடித்ததினால் திருவையாறு வைரவர் கோவிலடியில் வசிக்கும் இராமநாதனும், அவரது மனைவியுமே படுகாயம் அடைந்தனர். (ஒ-76)

### பிரார்த்தனை

கோப்பாய், ஆக 5 கோப்பாய் வடக்கு ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோவிலில் கடந்த ஒரு மாத காலமாக நாட்டில் அமைதிவேண்டி ஞான பண்டித சைவ விருத்தி சங்கத்தினால் கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது. (இ-72)

### பங்கீட்டு அட்டை

வட்டுக்கோட்டை, ஆக 5 சங்கானை ப. நோ. கூ. சங்கம் தனது எல்லைப் பரப்பிலுள்ள 34 கிளைகளுக்கும் புதிய பங்கீட்டு அட்டைகளை வழங்கியுள்ளது. [இ-161]

### அகதிகளுக்கு சுகாதார சேவை

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 5 புதுக்குடியிருப்பில் தங்கியுள்ள ஆயிரத்து 400 திருகோணமலை அகதிக் குடும்பங்களுக்கு யாழ் செஞ்சிலுவைச் சங்கம் நடமாடும் சுகாதாரச் சேவை மூலம் சுகாதார வசதிகளை வழங்கி வருகிறது.

அகதிகள் மத்தியில் பரவிய வயிற்றோட்டம், சொறிசிரங்கு, கண்நோய் போன்றவை தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது [இ-3]

### நல்லூர் "இராஜதானி"

கொழும்புத்துறை, ஆக. 5 யாழ். மாவட்டத்தில் பல கிராமசேவையாளர்கள் பிரிவுகளுக்குப் பெயர் மாற்றப்பட்டு உள்ளன.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் - புதிதாகப் பிரிக்கப்பட்ட பிரிவுகளுள் ஒன்றான - நல்லூர் வடக்கு கிராம சேவையாளர் பிரிவு நல்லூர் ''இராஜதானி'' கிராம சேவையாளர் பிரிவு எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது. [உ-30]

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஆக. 5 விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் காங்கேசன் துறை கிழக்கு சிற்றூரவையின் ஏற்பாட்டில் நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு கலந்துரையாடல் ஒன்று நடைபெறவிருக்கிறது.

அளவெட்டி ஆசிரமத்துக்கு முன்னால் உள்ள வட்ட அவைக் காரியாலயத்தில் இந்த கலந்துரையாடல் நடைபெறும். (உ)

### சம்பளம் இல்லை

யாழ்ப்பாணம், ஆக. 5 வட பிராந்திய நெல் சந்தைப்படுத்தல் சபை ஊழியர்களுக்கு கடந்த இரண்டு மாத காலமாக சம்பளம் கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-113)

### லொறி மீது "கலிபர்" தாக்குதல்

பச்சிலைப்பள்ளி, ஆகஸ்ட் 5 தேங்காய் ஏற்றிக் கொண்டு வந்த லொறி மீது இத்தாவில் சந்திக்கருகில் ஹெலியிலிருந்து ''90 கலிபரினால்'' தாக்குதல் நடத்தப்பட்டது.

இத் தாக்குதலில் லொறி பலத்த சேதமடைந்தது. சாரதியும் உதவியாளரும் லொறியின் கீழ் படுத்து காயம் ஏதுமின்றித் தப்பிக்கொண்டனர்.

கொடிகாமத்திலிருந்து சாவகச்சேரி நோக்கிச் சென்ற தட்டி வான் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. எனினும் சேதம் ஏற்படவில்லை. (ஓ-117)

### கொட்டடியில் திருட்டு

யாழ்ப்பாணம், ஆக. 5 கொட்டடிப் பகுதியில் உள்ள சீனிவாசகம் வீதியில் இடம் பெயர்ந்து சென்றவர்களின் இரு வீடுகளில் பொருள்கள் திருடப்பட்டுள்ளன. (இ-113)

### வெற்றிடங்களை நிரப்புமாறு பணிப்பு

கொழும்பு, ஆக. 5 பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர்களுக்கு வெற்றிடங்களை நிரப்பும்படி மாகாண சபைகள் அனைத்தையும் கல்விச்சேவைகள் ஆணைக்குழு கேட்டுள்ளது. [உ-எ]

### அகதிப்பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஆக. 5 திருகோணமலை உப்புவெளியைச் சேர்ந்த பெண் ஒருவர் அகதியாக இடம் பெயர்ந்து காட்டுப்பாதை வழியாக நடந்து வந்து கொண்டிருந்த சமயம், முள்ளியவளையில் வைத்து வயிற்றோட்ட நோயால் இறந்தார்.

அப்பெண்ணின் சடலம் இனத்தவர்களால் அங்கேயே அடக்கம் செய்யப்பட்டது. (இ-3)

### முல்லைத்தீவு தபால் ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 5 இடம்பெயர்ந்து யாழ். மாவட்டத்தில் தங்கியுள்ள முல்லைத்தீவு தபால் ஊழியர்களின் ஜூலை மாத சம்பளக் காசோலைகளை நாளை திங்கட்கிழமைக்கு முன்னர் உரும்பராயில் உள்ள தமது இல்லத்தில் வந்து பெற்றுக்கொள்ளும்படி தபால் திணைக்கள அதிகாரி திரு. தர்மராஜன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அத்தியட்சகர் காரியாலயம், முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், முள்ளியவளை ஆகிய பகுதிகளில் கடமையாற்றியவர்களின் காசோலைகளே வழங்கப்பட இருக்கின்றன. (உ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிட்டபுரம் குண்டு வீச்சில் 10 வீடுகள் சேதமுற்றன

காங்கேசன்துறை, ஆக. 5

மாவிட்டபுரம் ஆலய சுற்றாடலில் இரண்டாவது முறையாக நடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற குண்டுத் தாக்குதலால் ஏராளமான வீடுகள் சேதமடைந்தன.

காலை எட்டு மணியளவில் மாவிட்டபுரம் ஆலய கிழக்கு வீதிப்பக்கமாக அவ்ரோ விமானத்திலிருந்து இரண்டு பீப்பா குண்டுகள் வீசப்பட்டன.

இத் தாக்குதலில் பத்துக்கு மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமடைந்தன.

குண்டு வீச்சின் போது பொது மக்கள் அல்லோல கல்லோலப் பட்டு ஓடினர். ஒரு சிலருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டன.

வெள்ளிக்கிழமை பூசை பார்க்கச் சென்ற பலரும் ஆலயத்தில் தஞ்சமடைந்தனர்.

இதேவேளை — நேற்றுக் காலையில் பலாலியில் இருந்து காங்கேசன்துறைப் பகுதியை நோக்கிச் ஷெல் வீச்சு இடம் பெற்றது. (இ-68)

# வவுனியாவிலிருந்து அகதிகள் முல்லைக்கு இடம் பெயர்வு

யாழ்ப்பாணம், ஆக. 5

வவுனியா மாவட்டத்தில் தற்போது நிலவும் சூழ் நிலை காரணமாக 500 குடும்பங்களைச் சேர்ந்த 4 ஆயிரம் பேர் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

இதேவேளை திருகோணமலை மாவட்டத்தில் இருந்து வரும் அகதிகள் எண்ணிக்கை குறைந்த போதும் வவுனியாவில் இருந்து வரும் அகதிகள் எண்ணிக்கை அதிகரிப்பதால் முல்லைத்தீவில் அகதிகளின் எண்ணிக்கை 45 ஆயிரமாக அதிகரித்துள்ளது. (இ-10)

# தமிழ்ப் பகுதி மாணவருக்கு தனியான ஜீ. சி. ஈ. பரீட்சை

வடக்கு, கிழக்கில் அமைதி ஏற்பட்டவுடன் அங்கு தனியான ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சை நடத்தப்படும் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று நேற்றுச் செய்தி வெளியிட்டது.

அகதிமுகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கும், வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இருந்து வெளியேறியவர்களுக்குமாக இந்தப் பரீட்சை நடாத்தப்படும் என்றும்—

அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் ஜீ சி. ஈ. உயர்தரப் பரீட்சை இம்மாதம் திட்டமிட்டபடி நடாத்தப்படும் என்றும் அப் பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது. [ஒ-எ]

# தமிழகத்தில் 150 முகாம்களில் 54 ஆயிரம் ஈழத்தமிழ் அகதிகள்

சென்னை, ஆக. 5

தமிழகம் சென்றுள்ள 54 ஆயிரம் இலங்கைத் தமிழ் அகதிகள் சென்னை, கன்யாகுமரி, நீலகிரி மாவட்டங்களைத் தவிர்த்து ஏனைய மாவட்டங்களில் 150 முகாம்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர்.

தமிழ் அகதிகள் மறுவாழ்வுத்துறை விசேட அதிகாரி சி. எம். இராம்தாஸ் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அகதிகளின் புனர்வாழ்வுக்காக தமிழக அரசு ஒரு கோடி ரூபாவும், மத்திய அரசு இரண்டு கோடி ரூபாவும் ஒதுக்கியுள்ளதாகவும் அவர் மேலும் சொன்னார்.

# ஆசிரியர்களுக்கு புதிய இடமாற்றத் திட்டம்

கொழும்பு, ஆக. 5

ஆசிரியர்களுக்கான வருடாந்த இடமாற்ற முறைத் திட்டம் முற்றாக இரத்துச் செய்யப்படுவதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்குப் பதில் புதிய இடமாற்றத் திட்டம் ஒன்றை அமைச்சு அமுல் நடத்தும்.

இதன் படி- பாடசாலைகளில் உள்ளவெற்றிடங்களை நிரப்பவேஇனி ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படும். (இ-எ)

# வாகன ஒழுங்கு சேவையிலும் சென். ஜோன் அம்புலன்ஸ்

முத்திரைச் சந்தையில் முகாமிட்டுள்ள யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி சென் ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிப் படையினர் தமது வழிகாட்டல் நிலையம், முதலுதவிச் சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றுடன் அப்பகுதியில் வாகன ஒழுங்கைப் பேணும் நடவடிக்கையிலும் ஈடுபடுகின்றனர்.

யாழ்ப்பாணம் பஸ்நிலையம் மூடப்பட்டு முத்திரைச் சந்தைக்கு மாற்றப்பட்டதைத் தொடர்ந்து அங்கிருந்தே வெளிமாவட்டங்களுக்கான சகல போக்குவரத்துச் சேவைகளும் நடைபெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. [இ - 143]

## கூட்டு பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஆக. 5

நிரந்தர அமைதியும் சுபீட்சமும் ஏற்பட வேண்டி கடந்த 28 ஆம் திகதி தொடக்கம் கணேஸ்வரம் குருக்கள் கிணற்றடி விநாயகர் ஆலயத்தில் கூட்டுப்பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது. ஆலய கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமான இப் பிரார்த்தனை நாளை 6 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவு பெறும்.

## கடமைக்கு திரும்ப காலக்கெடு

கொழும்பு, ஆக. 5

இம்மாதம் 7 ஆம் திகதிக்கு முன்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரச ஊழியர்கள் கடமைக்குத் திரும்ப வேண்டும். அப்படி திரும்பத் தவறுபவர்கள் வேலை இழந்தவர்களாகக் கருதப்படுவர்.

பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாணசபைகள் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா மேற்கண்டவாறு அறிவித்திருக்கிறார். (இ-எ)

# வவுனியா நிலையை நேரில் வந்து அறியுமாறு இ.தொ.காவுக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 5

வவுனியா மாவட்டத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளினால் அகதிகளாகியுள்ள மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்க ஏற்பாடு செய்வதுடன் இ. தொ. காங்கிரஸ் தூதுக்குழு ஒன்று நேரடியாக இந்தப் பகுதிகளுக்கு வந்து பார்வையிட வேண்டும்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வவுனியாமாவட்ட அமைப்பாளர் திரு பி. மருதப்பிள்ளை காங்கிரஸ் தலைமைப் பீடத்திடம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வவுனியா மாவட்ட நிலை குறித்து அவர் மகஜர் ஒன்றைத் தலைமைப் பீடத்துக்கு அனுப்பிவைத்துள்ளார். அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருக்கும் முக்கிய தகவல்கள் வருமாறு:-

★ 15-6-90ல் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக தோணிக்கல், கூமாங்குளம், தவசிக்குளம், சின்னக்குளம், வேப்பங் குளம், உக்கிளாங்குளம், பண்டாரிக்குளம், நாகர் இலுப்பங்குளம், இராசேந்திரக் குளம், தாண்டிக் குளம், மகாரம்பக் குளம், ஓமந்தை, பம்பைமடு, பூவரசங் குளமும் அதனைச்சார்ந்த பக்கத்துக் கிராமங்களும் வவுனியா அரச அதிபர், செட்டிக்குளம் உதவி அரசாங்கஅதிபர் பிரிவுகளைச் சேர்ந்த சகல கிராமங்களிலும் —

மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த நானாட்டான், அடம்பன், மாந்தை, சிலாபத்துறை சார்ந்த கிராமங்களையும் சேர்ந்த மக்கள் உடுத்த உடுப்புடன் அகதியானார்கள்.

★ வவுனியா மாவட்டத்தில் உள்ள 70 வீதமான வீடுகளை இராணுவத்தினர் எரித்துள்ளனர்.

★ ஏனையவற்றைச் சிங்களவர்கள் கொள்ளையடித்துள்ளனர்.

★ வவுனியா மாவட்டத்தில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

★ இந்தப் பகுதியைச் சேர்ந்த 25 சதவீதமானவர்கள் இந்தியா சென்றுள்ளனர். 30 சதவீதமானவர்கள் இந்தியா செல்லக் காத்திருக்கிறார்கள். பணம் இன்றி பெரும் கஷ்ட நிலையில் உள்ளனர்.

★ 25 வீதமான மக்கள் மடு ஆலயத்துக்கு அருகில் மர நிழலில் கஷ்ட நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. மருதப்பிள்ளை தாம் இந்தமகஜரை ஜூலை மாதம் 16 ஆம் திகதி எழுதிய போது வவுனியாவில் சிவில் நிர்வாகம் குன்றியிருந்தது குறித்தும்—

ஷெல் வீச்சு, பொம்மரில் இருந்து தீக்குண்டு வீச்சு என்பன நாளாந்தம் நடந்து கொண்டிருந்தது குறித்தும் — விவரித்திருக்கிறார். (அ-3)

## காத்தான்குடி படுகொலைகள்:

# இலங்கை அரசாங்கத்தை அஷ்ரப் கண்டிக்கிறார்

கொழும்பு, ஆகஸ்ட் 5

காத்தான்குடிப் படுகொலைகளுக்கான முழுப்பொறுப்பையும் இலங்கை அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

— இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப். எம்.எச்.எம். அஷ்ரப் கண்டனம் தெரிவித்தார்.

நேற்று கொழும்பில் நடத்திய பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் இந்தக்கண்டனத்தை அவர் வெளியிட்டார்.

கிழக்கு முஸ்லிம்களுக்கு உரிய பாதுகாப்பை உறுதிப்படுத்த இலங்கை அரசு தவறிவிட்டது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். (உ-எ)

## வடக்கு, கிழக்கிற்கு

# ரூ.30 லட்சம் பெறுமதியான மருந்துகள் ஆஸி உதவி!

கொழும்பு, ஆக. 5

ஆஸ்திரேலிய அரசு அன்பளிப்பாக வழங்கியுள்ள 30 லட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளும் வைத்திய உபகரணங்களும் கொபன்ஹேகனில் உள்ள யுனிசெப் விநியோக நிலையத்தில் இருந்து விமான மூலம் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தன.

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியமாகத் தேவைப்படும் மருந்து மற்றும் வைத்திய உபகரணங்கள் இவற்றில் அடங்கியுள்ளன.

யுனிசெப் ஊடாக இப்பொருள்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் தொண்டர் நிறுவனங்கள் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பிவைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

## காத்தான்குடி - - -

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

திருந்த அவர்கள் உள்ளேயிருந்த முஸ்லிம்கள் மீது சுமார் அரைமணி நேரம் சரமாரியாகச் சுட்டனர் என்றும் —

அதில் 140 முஸ்லிம்கள் உயிரிழந்தனர் என்றும் —

200 பேர்வரை காயமடைந்தனர் என்றும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர். ஜனாப் அஷ்ரப் தெரிவித்ததாக இந்திய வானொலி அறிவித்தது.

ஆனால் இந்தச் சம்பவத்தில் 97 பேர் உயிரிழந்ததாகவும் —

சுமார் 70 பேர் படுகாயமுற்றதாகவும் தகவற்திணைக்களம் நேற்று நண்பகலில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தாக்குதலை நடத்தியோர் பின்னர் இரு வள்ளங்களில் ஏறி மட்டக்களப்பு வாவி ஊடாகத் தப்பிச் சென்றதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டது.

உயிரிழந்தோரில் 127 பேரின் சடலங்கள் நேற்று மாலை வரை மீட்கப்பட்டதாகவும்—

மேலும் சிலரின் சடலங்களை அவர்களின் உறவினர்கள் உடனடியாக அகற்றிவிட்டனர் என்றும் முஸ்லிம் காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

படுகாயமடைந்த எழுபதுக்கும் அதிகமானோர் ஹெலிக்கொப்டர்கள் மூலம் கண்டி, பொலன்னறுவை, மின்னேரியா ஆஸ்பத்திரிகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர் என்று கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

### இராணுவத் தளபதி விரைவு

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா உயர் இராணுவ அதிகாரிகளுடன் நேற்று கொழும்பில் இருந்து விமான மூலம் மட்டக்களப்புக்குச் சென்று, சம்பவம் நடந்த இடத்தைப் பார்வையிட்டார். (உ-எ)

## உணவுப்--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

உணவு ஆணையாளர், கூட்டுறவுஆணையாளர் கொண்ட குழுவால் புதிய விலைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

அரிசி ஒரு கிலோ 13 ரூபா, சீனி ஒரு கிலோ 30 ரூபா, மா ஒரு கிலோ 14 ரூபா 25 சதம், பருப்பு ஒரு கிலோ 40 ரூபா என புதிய விலை [illegible] [ஒ-3]

# 144 பேர் இன்று பயணம்

யாழ்ப்பாணம், ஆக. 5

வெளிநாட்டு பாஸ்போர்ட்டுகள் வைத்திருக்கும் 144 பேர் இன்று கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட உள்ளனர்.

இவர்களில் வெளிநாட்டுப் பிரசைகளும், வெளிநாட்டுப் பாஸ்போர்ட்டுடன் இங்கு வந்த உள்நாட்டுக்காரர்களும் அடங்குவர்.

இவர்களைக் கப்பலில் அனுப்புவதற்கான நடவடிக்கைகளை செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழு மேற்கொண்டுள்ளது. (அ-9)

## மினி பஸ்ஸில் திருடன்

யாழ்ப்பாணம், ஆக, 5

பூநகரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்த மினி பஸ்ஸின் மேற்பகுதியில் பயணம் செய்த நபர் ஒருவர், அங்கு வைக்கப் பட்டிருந்த பைகளில் இருந்து பொருள்களைக் கையாடினார்.

இவரது நடத்தையில் சந்தேகம் கொண்ட சகபிரயாணிகள் அவரைச் சோதனையிட்டதில் விஷயம் அம்பலத்துக்கு வந்தது.

அந்தநபரிடம் இருந்து மணிக்கூடும் பெறுமதிவாய்ந்தபட்டுச்சேலை, சேர்ட் என்பனவும்பறிமுதல் செய்யப்பட்டன. (ஒ-3)

## நாட்டில் பொருளாதார நெருக்கடியாம்

கொழும்பு, ஆக. 5

வடக்கு-கிழக்கு யுத்தம் காரணமாக நாடு பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியுள்ளது.

பிரதமர் டி.பி. விஜேதுங்க நேற்று கண்டியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார். [ஒ-எ]

## திருமறை கலாமன்றம் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஆக. 5

இலங்கையின் இன்றைய இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும். அதற்குச் சிறந்த வழியாக சர்வமதத்தலைவர்கள் சமர்ப்பித்த மகஜர் ஆதரிக்கப்பட வேண்டும். நிரந்தர தீர்வினை சாத்தியமாக்கும் சூழ்நிலைகளைஏற்படுத்தும் பொருட்டு உடனடி யுத்த நிறுத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இவ்வாறு யாழ் திருமறைக் கலாமன்றம் தீர்மானம் நிறைவேற்றி உள்ளது. (இ-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★ தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள ஈழ அகதிகளை இலங்கைத் தூதர் சென்று பார்ப்பதை ஏற்க முடியாது!

## தமிழக முதல்வர் அறிவிப்பு

சென்னை, ஆக. 5

தமிழ்நாட்டில் ஈழத்தமிழர் தங்கியுள்ள அகதி முகாம்களை சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதர் சென்று பார்ப்பது ஏற்றுக்கொள்ளத் தக்கது அல்ல இது சம்பந்தமான ஆட்சேபனையைத் தமிழகஅரசுவெளியுறவு அமைச்சிடம் தெரிவித்துள்ளது.

— இவ்வாறு தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தெரிவித்தார்.

புதுடில்லியில பிரதமர்வி பி சிங்கைச் சந்தித்து இலங்கைத் தமிழர் நெருக்கடி பற்றி பேச்சுக்களை நடாத்திவிட்டு அவர் நேற்று சென்னை திரும்பினார்.

பின்னர் செய்தியாளர் மத்தியில் பேசுகையிலேயே திரு. கருணாநிதி மேற்கண்டவாறு கூறினார்.

ஈழ அகதிகளுக்கு தமிழக அரசு மத்திய அரசின் உதவியுடன் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் பல நன்மைகளைச் செய்து வருகிறது. நாம் அவர்களுக்கு வசதியுடன் கூடிய வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதைக்கூட இலங்கை அரசினால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

ஈழத்தமிழ் அகதிகள் ஏராளமாக தமிழகம் வருவதைத் தடுக்க இலங்கையிலேயே அகதி முகாம்களைத் திறப்பது குறித்து இலங்கை அரசுடனும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடனும் இந்திய அரசு பேச்சுக்களை நடாத்தி வருகிறது.

நான் பிரதமர் சிங்குடன் நடாத்திய பேச்சுக்களின் போது இத்தகவல் வெளியிடப்பட்டது.

ஆனால் இலங்கை அரசை மட்டும் நம்பி இத்தகைய அகதி முகாம்கள் அமைக்கப்படுவதை நான் ஏற்றுக் கொள்ளவில்லை.

—இவ்வாறு அவர் மேலும் சொன்னார். [உ-எ]

## பரந்தனில் ஹெலி சேதம்

யாழ்ப்பாணம், ஆக. 5

பரந்தன் முகாம் இராணுவத்தினர் கடந்த வெள்ளியன்று ''பவள்'' கவச வாகனத்தின் உதவியுடன் முகாமிலிருந்து 150 யார் முன்னேறி வந்த வேளையில், விடுதலைப் புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர்.

''பவள்'' மீது ஆர்.பி ஜி. தாக்குதல் நடத்தப்பட்டதில் அந்த வாகனம் சேதமுற்றது என்றும்–

அதேவேளையில் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் ஹெலி ஒன்றும் சேதமாக்கப்பட்டது என்றும்–

விடுதலைப் புலிகள் தரப்பில் றீஸ்வரன் (கருப்பட்டைமுறிப்பு) என்னும் போராளி வீரமரணமடைந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

## யாழ். ஆஸ்பத்திரி குறித்து தொடர்ந்து பேச்சுவார்த்தை

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 5

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை மீளஆரம்பிப்பது சம்பந்தமாக பாதுகாப்புஅமைச்சுடன் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத் தலைமைப்பீடம் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தி வருவதாக அறியப்படுகிறது.

யாழ். ஆஸ்பத்திரி சம்பந்தமான இப்போதைய விவரங்களையும், அங்கு பணிபுரியும் டாக்டர்களின் கருத்துக்களையும் அறியும்பொருட்டு சங்கத்தின் தூதுக்குழு ஒன்றை இங்கிருந்து கொழும்புக்குஅனுப்பி வைக்குமாறு தாய்ச் சங்கம் கேட்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியை மீள இயக்குவதற்கு சுகாதார அமைச்சு இணக்கம் தெரிவித்தது. அதனைத் தொடர்ந்து வைத்திய அதிகாரிகள் சங்கம் பாதுகாப்பு அமைச்சு அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

யாழ். ஆஸ்பத்திரிப் பகுதியை யுத்த சூன்யப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தும் யோசனை ஒன்று குறித்துப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா தகவல் வெளியிட்டது தெரிந்ததே. (அ-3)

## மட்டக்களப்பில் தாக்குதல்; சிப்பாய்கள் 6 பேர் பலி

யாழ்ப்பாணம், ஆக, 5

மட்டக்களப்பு, 19 ஆம் கட்டைப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதல் ஒன்றில் 6 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர்.

நேற்றுக் காலை 6 30 மணியளவில் நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலின் போது ரி 56 -1, மகசின்- 1, ரவை-30, என்பனவும் கைப்பற்றப்பட்டன.

முகாமில் இருந்து 200 யார் தூரத்தில் வைத்தே தாக்குதல் நடத்தப்பட்டது. [ஒ-9]

## 10 அகதி இளைஞர் கைது

யாழ்ப்பாணம், ஆக. 5

மட்டக்களப்பு, வந்தாறுமூலை பல்கலைக் கழகத்தை கடந்த வெள்ளிக்கிழமை சுற்றி வளைத்த இராணுவத்தினர் அங்கு அகதிகளாகத் தஞ்சம் புகுந்திருந்த 10 இளைஞர்களைக் கைது செய்தனர்

செங்கலடி முகாமுக்கு கொண்டு செல்லப்பட்ட இவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது தெரியவில்லை.

## நல்லடக்கம்

கொழும்பு, ஆக. 5

காத்தான்குடியில் படுகொலை செய்யப்பட்ட முஸ்லிம்களின் ஜனாசாக்கள் நேற்று மாலை நல்லடக்கம் செய்யப்பட்டன.

நல்லடக்க வைபவத்தில் அரசாங்கத்தின் சார்பிலும், ஜனாதிபதியின் சார்பிலும் அமைச்சர்கள் ஏ. ஆர். மன்சூர், ஜோன் அமரதுங்கா, ஏ. எச். எம். அஸ்வர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## ஊர்காவலர் சேர்ப்பு; பொலீஸ் பிரிவு அறிவிப்பு

கொழும்பு, ஆக. 5

ஐம்பதாயிரம் ஊர்காவற் படையினரைச் சேர்ப்பதற்கான அறிவித்தலை பொலீஸ் தலைமையகம் வெளியிட்டிருக்கிறது.

விண்ணப்பதாரர்கள் 18-35 வயதுக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்றும்–

ஐந்தாம் வகுப்புச். சித்தியடைந்தவர்களாகஇருக்கவேண்டும் என்றும்–

விண்ணப்பதாரர்களின் உயரம் 5 அடி 5 அங்குலத்திற்குக் குறையாததாக இருக்கவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

## திருக்கோவிலில் தாக்குதல்

அம்பாறையில், திருக்கோவில் இராணுவ முகாம் மீது நேற்று முன் தினம் [வெள்ளி] இரவு விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தினர்.

முகாமை நோக்கி''அருண்-89'' தாக்குதலும் நடத்தப்பட்டது. சேத விவரம் தெரியவரவில்லை. [ஒ-9]

## தமிழ்ப்பெண் வெட்டிக் கொலை

திருகோணமலை சுங்கான்குழியைச் சேர்ந்த தமிழ்ப் பெண் ஒருவர் கடந்த வியாழக்கிழமை ஊர்காவல் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

கொலையுண்ட பெண்ணான ஞானசேகரம் பேபி 3 பிள்ளைகளின் தாயாவார். இவரது கணவரும் கடந்த வாரத்தில் இராணுவத்தினரால் கிண்ணியாவில் வைத்து வெட்டிக் கொல்லப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

## அரச அதிபர் அலுவலகம் சேதம்

யாழ்ப்பாணம், ஆக.5

முல்லைத்தீவு அரச அதிபர் அலுவலகம் விமானக்குண்டு வீச்சினாலும், ஷெல் தாக்குதல்களினாலும் பலத்த சேதமடைந்துள்ளது.

அரசாங்க அதிபர் காரியாலயம், மேலதிக அரசாங்க அதிபர் காரியாலயம், காணிப் பகுதிக் காரியாலயம், காணிப் பதிவு ஏட்டு அறை, புள்ளி விவரப் பகுதி அவசரகால புனர்வாழ்வுப் பகுதி, கம்பியூட்டர் அறை உட்பட அனைத்தும் [illegible] கிறது. (இ-10)

## மரண அறிவித்தல்கள்

### க. சுப்பிரமணியம்

(மணிய வாத்தியார்)

வட்டு. மேற்கைச் சேர்ந்தவரும், வட்டு-திருஞானசம்பந்தர் வித்தியாசாலை முன்னாள் அதிபருமான க. சுப்பிரமணியம் 03-08-90 வெள்ளியன்று காலமானார்.

அன்னார் மங்கையர்க்கரசியின் (அரசி மிஸ், வட்டு இந்துக்கல்லூரி ஓய்வு பெற்ற ஆசிரியை) அன்புக்கணவரும், சிவஞானவதியார், ஞானப்பூங்கோதை, (ஆசிரியை, திருமலை சண்முக வித்தியாலயம்), திருஞானசம்பந்தர் (திரு) (U. N. Technical Assistance Services Ethiopia), காலஞ்சென்ற மாணிக்கவாசகர், ஞானதேசிகர் (மின் பொறியியலாளர்--மின்சார சபை தலைமைக்காரியாலயம், கொழும்பு), கதிர்மாணிக்க மலத்தேவர், புனிதவதியார் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் 04-08-90சனிக்கிழமை பிற்பகல் 1-10 மணியளவில் வழுக்கையாறு மயானத்தில் நடைபெற்றது.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மனைவி

[சி-5300]

### முருகேசு கணபதிப்பிள்ளை

[இளைப்பாறிய ஆசிரியர்]

வடலியடைப்பை பிறப்பிடமாகவும் பண்டத்தரிப்பை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கணபதிப்பிள்ளை 04 - 08 - 90 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற இராசமணியின் அன்புக் கணவரும்; திரு. M. K. ஜெகநாதன் (கனடா), காலம் சென்ற M. K. பத்மநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும்; பிறிட்ஜெட், ஜெயசீலி (ராணி, ஆசிரியை பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி) ஆகியோரின் மாமனாரும்; நளினி, சுகந்தன், வசந்தன், சுதர்ஷன், பிரியதர்ஷன், சுகன்யா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். இறுதிச் சடங்குகள் 05-08-9 ஞாயிறு காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:

திருமதி. ராணி பத்மநாதன்.

கீரிமலை வீதி,
பண்டத்தரிப்பு.

(13997)

## மரண அறிவித்தல்கள்

### V. சாம்பசிவ ஐயர்

மானிப்பாயைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் முன்னைநாள் மட்டக்களப்பு உதவி அரசாங்க அதிபரும் UNDP ஸ்தாபன இணைப்பதிகாரியுமான V. சாம்பசிவஐயர் காலமானார். இவர் மானிப்பாய் வெங்கடேச இரத்தினசாமி குருக்கள் சீதாலட்சுமி தம்பதிகளின் புதல்வரும், அகிலாண்டேஸ்வரியின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரி, இரத்தினேஸ்வரி, சுபாஷினி, கிரிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சீதாபதிஐயர், கார்த்திகாயனி, கிரிஜா, இராமசாமிஐயர் (மணி), சண்முகதாச ஐயர் ஆகியோரின் சகோதரரும் ஜெகதீஸ்வரனின் மாமனாரும் ஜான்ஹவியின் பேரனும், மாவிட்டபுரம் வைத்தியநாதக் குருக்கள் தம்பதிகளின் மருமகனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் மட்டக்களப்பு கல்லடியில் இன்று 5 - 8 - 90 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும்.

தகவல்:

இராமசாமிஐயர் (மணி)

உடுவில் வீதி,
மானிப்பாய்.

(13992)

### தம்பு - சிவசுப்பிரமணியம்

(இளைப்பாறிய அரச மரக் கூட்டுத்தாபன-உத்தியோகஸ்தர்)

உரும்பிராய் தம்பு. சிவசுப்பிரமணியம் (இளைப்பாறிய அரச மரக் கூட்டுத்தாபன உத்தியோகஸ்தர்) 01 . 08 . 1990இல் காலமானார். இவர் தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், சிவசோதிநாதன் (பொறியியலாளர் - கனடா), காலஞ்சென்ற பத்மநாதன் [Factory Officer - தெரணியாகலை], பத்மராணி, புஸ்பராணி, இந்திராணி, ஸ்ரீரங்கநாதன் (கணனி பொறியியலாளர் கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தங்கேஸ்வரி (கனடா), சத்தியதேவி, நடேசன் (முகாமையாளர் - உல்லாசத்துறை) நாகரத்தினம் (நில அளவையாளர்-ஓமான்), பாலசுப்பிரமணியம் (பதிவுபெற்ற வைத்திய அதிகாரி), புஸ்பலதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 01 - 08 - 90 புதன்கிழமை மாலை 4 மணியளவில் அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு உரும்பிராய் இளங்காட்டு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;

திருமதி. த. சிவசுப்பிரமணியம்,
''ராணி வாசம்''
உரும்பிராய்.

(13994)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 05-08-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org